# சமாதான முயற்சிகளை இந்தியா அவதானிக்கும்!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 19 இதழ் 21
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 3 3-1995

[புதுடில்லி]
இலங்கையின் சமாதான முயற்சிகளை இந்தியா மிகவும் உன்னிப்பாக கவனித்து வருவதாக இந்திய ஜனாதிபதி சங்கர் தயாளசர்மா கூறியுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட மங்களமுனசிங்க தமது நியமனப்பத்திரத்தை இந்திய ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தபோது நடைபெற்ற வைபவத்தில் இந்திய ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய ஜனாதிபதி இது பற்றி மேலும் கூறுகையில்,

இலங்கையின் இனப்பிரச்னையைப் பொறுத்தமட்டில் அந்த நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உட்பட்ட வகையில் ஒரு சமாதானத் தீர்வைக் காணவேண்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழ்பகுதியில் படையினர் கெடுபிடி

(திருமலை)
திருமலையில் தமிழர் வதியும் குடியிருப்புகளுக்கு செல்லும் படையினர் அங்குள்ள ஜன்னல்கள், தீராந்திகள், கதவுகள், மற்றும் பொருட்களை எடுத்துக் காவலரண்களை பலப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள ஆண்கள் பலவந்தமாக கூட்டிச் செல்லப்பட்டு காவலரண் அமைக்கும் வேலையில் இராணுவத்தினர் ஈடுபடுத்துவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சில் மந்தநிலை என்றாலும்

# சமாதானமுயற்சிகளுக்கு குந்தகம்ஏற்பட்டுவிடாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

[கொழும்பு]
அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தேக்கநிலை ஏற்பட்டது உண்மைதான் எனினும் அரசின் சமாதான முயற்சிகளுக்கு இதனால் குந்தகம் ஏற்பட்டுவிட்டதென்று கூறமுடியாது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் பத்திரிகையாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் அதில் ஏற்பட்டுள்ள மந்தநிலை குறித்தும் பத்திரிகையாளர்

(2ம் பக்கம் பார்க்க)

### அரசஊழியர்,சம்பள முரண்பாடு ஆராயப்படும்

(கொழும்பு)
அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுபற்றி ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுமென்று. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்து உரையாடியபோதே ஜனாதிபதி இந்த ஆணைக்குழு பற்றி தெரிவித்தார், வி-இ

லலித் கொலை விவகாரம்

## முக்கிய சந்தேகநபர் விளக்க மறியலில்

[கொழும்பு]
லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பான முக்கிய சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவரது பெயர் லிங்கேஸ்வரன் என தெரிவிக்கப்பட்டது.

கிருலப்பனையில் நடந்த பொதுக்கூட்டத்தில் வைத்து லலித் அத்துலத்முதலியை சுட்டுக்கொன்றதாகக் கூறப்படும் ரகுநாதன்என்பவருடன் தொடர்பு வைத்திருந்தார் என தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிபதி லிங்கேஸ்வரனை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று உத்தரவிட்டார.

மற்றும் ஐந்து சந்தேகநபர்களுக்கு ஐயாயிரம் முதல் பததாயிரம ரூபாவரையிலான அபராதமும் விதிக்கப்பட்டது.

லலித் கொலை தொடர்பாக தகவல் கொடுக்காததற்கும், கொலையாளிகள் தொடர்பாக தகவல் கொடுக்கத் தவறியதற்கும் இவர்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளையில் இந்தக் கொலை தொடர்பான புலன் விசாரணைகளை பொலிஸ் புலனாய்வுப்பிரிவு பூர்த்திசெய்து அதன் அறிக்கைகளை சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இ

ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில்

## போரை காரணமாக வைத்து ஆயுதகலாசாரம் அதிகரித்தது

[லண்டன்]
வடக்கு-கிழக்கு யுத்தத்தை காரணமாக வைத்து கடந்த ஐ. தே. கட்சி ஆட்சிக் காலத்தில் தென்பகுதியில் ஆயுதக் கலாசாரமும், பாதாள உலகப் பேர்வழிகளும் பெருமளவில் பெருகத் தொடங்கியதாக பி. பி. சி. தெரிவித்தது.

இது தொடர்பாக பி. பி. சி. மேலும் தெரிவிக்கையில்,

ஆயுதப்படைகளில் உள்ளோர் மட்டுமல்லாமல் அரசியல்வாதிகள், பிரமுகர்கள் போன்றோர் தமது சொந்தப் பாதுகாப்பு என்ற பெயரில் விதம்விதமான ஆயுதங்களை வைத்திருக்கக் காணப்பட்டனர்.

இந்நடவடிக்கைகளினால் பாதாள உலகப் பேர்வழிகள் நாட்டில் பெருகத் தொடங்கினர்.

பாதுகாப்புச்சேவை என்ற

(2ம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## சக்திவாய்ந்தகுண்டு கொழும்பில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)
கொழும்புக் கோட்டைப் பகுதியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த சக்திவாய்ந்த குண்டு ஒன்றை பொலிசார் கண்டு பிடித்துள்ளனர்.

கொழும்புக் கோட்டைக்கு அருகிலிருக்கும் பௌத்த கோபுர வீதியில் பல நாட்களுக்கு முன்பு மறைத்து வைக்கப்பட்டிருந்த இக்குண்டை, இராணுவத்தின் வெடிகுண்டு நிபுணர்கள் செயலிழக்கச் செய்தனர்.

இக்குண்டுக்குள், கண்ணாடிக்கு பூசப்படும் 2 கிலோ ரசம் இருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர். வி-இ

ஜனாதிபதி மாளிகையிலிருந்து

## இரத்தினக்கல் மறைவு பற்றி ஹேமாமீதுவிசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
ஜனாதிபதி மாளிகையிலிருந்து காணாமல்போன இரத்தினக்கல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் மனைவியான ஹேமா பிரேமதாசாவை இரகசியப் பொலிசார் இப்போது விசாரணை செய்துவருதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

திருமதி ஹேமா பிரேமதாசா ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறிய பின்பு அங்கிருந்த பல விலை உயர்ந்த பொருட்கள் மாயமாக மறைந்து விட்டதாகவும் இதுபற்றி

(4-ம் பக்கம் பார்க்க)

## திருக்கேதீஸ்வரத்திலிருந்து இராணுவம் வெளியேறும்!

(கொழும்பு)
திருக்கேதீஸ்வரம் கோவிலிலிருந்து இராணுவம் விரைவில் வெளியேறுமென்று சமய கலாச்சார அமைச்சர் திரு. லஷ்மன் ஜெயக்கொடி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அமைச்சர் இதுபற்றி மேலும் தெரிவிககையில்,

திருக்கேஸ்வரக் கோவிலில் உள்ள இரு கட்டிடங்களில் தற்போது இருக்கும் இராணுவத்தினர் அனைவரும் விரைவில் வெளியேறுவர். இராணுவம் இங்கிருந்து வெளியேறியதும் மேற்படி இரு கட்டிடங்களும் ஆலயப் பரிபாலனசபையிடம் ஒப்படைக்கப்படும். இத்துடன் இப்பகுதிக்கு உடனடியாக மின்சாரமும் வழங்கப்படும்.

இப்பகுதியிலிருந்து இராணு

(4ம் பக்கம் பார்க்க)

## 5000 தமிழ் மொழி ஆசிரியர் நியமிக்கப்படுவர்

[கொழும்பு]
5000 தமிழ்மொழிமூலம்ஆசிரியர்கள் வருங்காலத்தில் நியமிக்கப்படுவார்கள் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர்

கல்வி உயர்கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்திற்கு பதில

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி ஆரம்பம் க. பொ. த. (சா/த) கடைசித் தகமை. சனி, ஞாயிறு சமூகம் தர வசதியற்றோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (சி-1406)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1397)

### வைரவிழாப் போட்டிகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய வைரவிழாவை முன்னிட்டு வித்தியாலய மாணவர்களுக்கிடையே பேச்சு கட்டுரை, பாட்டு போட்டிகளிம் நாடக நடனப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

முத்தமிழ் மன்றம் இப்போட்டிகளை நடத்தவுள்ளது.

139

### சிசிலுக்கு மாரடைப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னவுக்கு மாரடைப்பு நோய் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறார்.

இவர் பதவியிலிருந்தகாலத்தில் ஆயுதக் கொள்வனவு மற்றும் பணம் கையாடல் தொடர்பாக இவர் மீது தற்போது விசாரணைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. -கே-ரி

### மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இம் மாதம் 8ம் திகதி இடம்பெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக யாழ் மாநகரசபையினர் நல்லூர் கலாச்சார மண்டபத்தில் நிகழ்வு ஒன்றை இம மாதம் 8ம் திகதி மாலை 3 மணிக்கு நடாத்தவுள்ளார்கள்.

மகளிர் தினத்தன்று ஊழியர்களால் தயாரிக்கப்பட்ட சுகாதாரச் கல்வி, கலை நிகழ்ச்சிகள் முக்கிய நிகழ்வாக இடம்பெற இருக்கின்றன. ம

### போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இம் மாதம் 18ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கு விண்ணப்பம் செய்த விண்ணப்பதாரிகள் இப் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெருதவர்கள் கொழும்பில் உள்ள கல்வி விரிவாக்க சேவைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. 162-ரி

# தமிழர் நிலங்கள் திருமலையில் பறிமுதல்

(திருமலை]

திருமலைப்பகுதியில் தொழிற்சாலைகள் அமைப்பது என்ற பெயரில் பாரம்பரியமாக அப்பகுதியில் வாழ்ந்து வந்த தமிழர்களின் நிலங்களை பறித்தெடுக்கும் முயற்சிகள் அரசின் ஆதரவுடன் திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலையில் குருவிப்பாலம் என்றபகுதியில் தமிழர்களுக்கு சொந்தமான மூவாயிரம் ஏக்கர் காணிகள் இவ்வாறு பறித்தெடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் திருமலையில் சமுத்திரா கிராமப் பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய பல வீடுகள் சிங்களவர்களுக்கு கட்டிக்கொடுக்கப்படும் அதே வேளையில் தமிழ் மக்களுக்கு இத்தகைய வசதிகள் எதுவும் செய்து தரப்படுவதில்லையாம்.

மேலும் கடற்தொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள், கண்ணாடி இழையிலான படகுகள் வழங்குவதிலும் பாரபட்சம் காட்டப்பட்டுவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-சி-ரி)

# இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தஜி குரு ஆராதனை விழா இன்று 3ம் திகதி வெள்ளிக்கிழமை நல்லை திருஞான சம்பந்த ஆதீனத்தில் காலை 8-30 மணிக்கு நடைபெறும் சிவதர்ம வள்ளல் கலாநிதி க. கனகராசா தலைமை வகிக்கின்றார். ம

0 0

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை அன்னை சாரதா தேவி சேவாச்சிரமத்தில் இன்று 3ம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீ ராம கிருஷ்ணபரமஹம்ஸரின் பிறந்தநாள் திதி பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளது.

0 0

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின் 160-ம் ஜெயந்தி விழா திருநெல்வேலி இராமகிருஸ்ணலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 5-00 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சிகள் பி. ப. 3-00 — 6-00 மணி வரை நடைபெறும்.

0 0

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று 3ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. க. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் கலந்து கொள்ளவுள்ளார். -ரி

0 0

(பண்டத்தரிப்பு)

மாதகல் நுணசை அரசினர் த, க. வித்தியாலய வருடாந்த விளையாட்டு போட்டி இன்று வெள்ளிக்கிழமையன்று மானிப்பாய் மெமோறியல் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (72)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினர் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடாத்தி வரும் வாராந்த நிகழ்வுகளில் இன்று 3-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3-00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ச. விநாயகமூர்த்தி 'பொன்னும் மெய்ப் பொருளும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். அறிமுக உரையை ஆசிரியர் க. முத்துவேலு வழங்குகிறார். (ம)

0 0

(உடுவில்)

உடுவில் கல்விக்கோட்டத்தினரால் தமிழ்மொழி (ஆண்டு 5) க்கான செயல்நூல் வெளியீடு மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் இன்று 03 ம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (109-ரி]

0 0 0

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று 03-ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப 1 30 மணிக்கு அதிபர் செல்வி பா. மார்க்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

### கண்டெடுக்கப்பட்டது

இராசையா வாசன் (மாணவன்) மண்டப இல: 4, ஆர் முகாம் கிளப்பன் பேர்க் சைனபே என்பவருடைய மாணவ அடையாள அட்டை யாழ் பஸ் நிலையத்தில் திரு. வி. பிரான்சிஸ் என்பவரால் கண்டெடுக்கப்பபட்டு ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது: உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

### விவசாயிகள் ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள விவசாயிகள் ஒல்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1995 மாசி மாதத்துக்கான ஒய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் 9ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கமத் தொழில் காப்புறுச்சபை மாவட்டக் காரியாலயத்தில் வழங்கப்படவுள்ளது. இதனைப் பெறுகின்ற விவசாயிகள் தவறாது தமது ஒய்வூதியத்தை பெற்றுக்கொள்ளுமாறு கமத் தொழில் காப்புறுதிச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.

### பேச்சில் மந்த

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அவரிடம் கேள்வி எழுப்பியபோது ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

''சமாதானம் பேச்சுவார்த்தைகளில் பின்னடைவு ஏற்பட்டது என்பது உண்மைதான். எனினும் அதற்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது என்று கூறமுடியாது''

இந்த நாட்டில் சமாதனம் ஏற்படவேண்டும் என மக்கள் மத்தியில் ஒரு திடமான உறுதி ஏற்பட்டுள்ளது.

அதைக் கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இதேவேளையில் விடுதலைப்புலிகளுக்கும்-அரசுக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் குந்தகம் ஏற்பட்டுள்ளது என்று கூறமுடியாது என்று கூறினர். வி-இ

### ஐ. தே. க.

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெயரில் பெருமளவு சிங்கள இளைஞர்கள் இராணுவம் மற்றும் பொலிஸ் சேவையில் சேர்க்கப்பட்டனர்.

இந் நடவடிக்கையானது நாட்டில் அமைதி ஏற்படுத்துவதற்குப் பதிலாக சமூக விரோத நடவடிக்கைக்கே வித்திடுவதாகக் காணப்பட்டது.

கடந்த 10 வருட காலத்தில் இலங்கையில் ஆயுதப் பெருக்கம்என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. -க-இ

# வீடுடைத்து திருடியவர் காவல் துறையால் கைது

]நெல்லியடி]

வீட்டில் புகுந்து சுமார் 26 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் உடுபிடவைகளையும் திருடிய நபரொருவரை பருத்தித்துறை தமிழீழ காவல் துறையினர் கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருட்களையும் மீட்டுள்ளனர்.

இத்துணிகர திருட்டுச் சம்பவம கடந்த மாதம் 22-ம் திகதி நெல்லியடி திருமகள் சோதி வீதியிலுள்ள இருசப்பு அங்கமுத்து என்பவர் வீட்டில் நிகழ்ந்துள்ளது.

வீட்டின் உரிமையாளர் பருத்தித்துறை காவல் பணிமனையில் புகாரிட்டதையடுத்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்ட காவல் துறையினர் கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருட்களையும் மீட்டெடுத்துள்ளனர். (160)

# விவசாய கல்லூரி போட்டி பரீட்சை

[யாழ்ப்பாணம்)

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் 1996/98-ம் ஆண்டிற்கான இரண்டு வருட டிப்புளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை யூலை மாதம் 1-ம் திகதி நாடு பூராவும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் இம் மாதம் 10-ம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர், மனிதவள அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை, என்ற முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவத்துக்கும் ஜனவரி மாதம் 8-ம் திகதி அரச வர்த்தமானியை யாழ். மாவட்டச் செயலகத்தில் பார்வையிடலாம் என தெரிவிக்கப்படுகிறது. (162)

# சூரிய கந்தவில் மீட்கப்பட்ட 22 எலும்பு கூடுகள்

## அடையாளம் காணப்படவில்லை

[கொழும்பு]

சூரியகந்தவில் தோண்டி எடுக்கப்பட்ட சடலங்களில் அடையாளம் காணப்படாதிருக்கும் 22 எலும்புக்கூடுகள் தங்கள் உறவினர்களுடையதல்ல என்று பலர் தெரிவித்துள்ளனர்.

எலும்புக்கூடுகளின் எண்ணிக்கையிலும்பார்க்க உரிமை கோருவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதனுல் அவற்றை அடையாளம் காண்பதில் அதிகாரிகளுக்கு குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இறந்தவர்களின் சரியான அடையாளத்தை அறிந்து கொள்வதற்காக உரிமை கோருவோருக்கு கேள்விகொத்துக்களை வழங்குமாறு எம்பிலிப்பிட்டிய நீதவான் அதிகாரிகளுக்கு பணித்துள்ளார்.

கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்குபொருத்தமான தகவல்களைத் தந்துள்ள பெற்றோரும் உறவினர்களும் அவற்றை அடையாளம் காண்பது தொடர்பான விசாரணைகளுக்கு சமூகமளிக்கும்படி அழைக்கப்படவுள்ளனர்.

[கே-ரி]

# கலை, இலக்கிய கருத்தரங்கு இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், வெளிச்சமும் இணைந்து நடாத்தும் கலை, இலக்கியக் கருத்தரங்கு இன்று நல்லூர் இளங்கலைஞர் மனற கலாமண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது. இன்றும் நாளையும், நாளை மறுதினமும் தொடரும் இக்கருத்தரங்கில் வாழ்வியலுடன் இணைந்த சிறுகதை, நாவல், கவிதை, ஓவியம், இசை, பாரம்பரியக் கலைவடிவங்கள், போராட்டகால்வாழ்வைப் பிரதிபலிக்கும் கலை, இலக்கியங்கள். உலக விடுதலைப் போராட்ட இலக்கியங்கள், பரந்துபட்ட மக்களுக்கான கலை. இலக்கியமும், தமிழர் பாரம்பரியமும், பண்பாட்டு மாற்றங்களும் என்ற பொருள்களில் அவ்வத்துறை சார்ந்த அறிஞர்கள் கலந்துரையாற்றுகின்றனர். இறுதி நாளன்று நிறைவு நிகழ்ச்சியாக மூத்த கவிஞர்கள் எழுவர் பங்குகொள்ளும் 'நெஞ்சில் குடியிருக்கும் நினைவுகள்'' என்ற கவியரங்கு இடம் பெறும். தினமும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணி வரை தொடரும் இக்கருத்தரங்கில் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலிருந்து முந்நூறுக்கு மேற்பட்ட பேராளர்களும், யாழ். மாவட்டத்திலிருந்து எழுநூறுக்கும் மேற்பட்ட பேராளர்களும் கலந்து கொள்கிறார்கள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழீழத்தின் சகல பகுதிகளிலிருந்தும் கலை, இலக்கியஆர்வலர்களும், படைப்பாளர்களும் கூடி போராடும் தேசத்தில கலை, இலக்கியங்களுக்கு இருக்கவேண்டிய பங்கு பணி பற்றி இக்கருத்தரங்கினூடாக பேசிதீர்மானிக்கவுள்ளனர்.

குடாநாட்டிலும், தூர இடங்களிலிருந்தும் வரும் பேராளர்களின் வசதி கருதி முற்கூட்டியே பதிவு செய்தவர்களுக்கான போக்கு வரத்து, மற்றும் மதிய உணவு போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இன்று தொடங்கும் முதல் நாள் அரங்கை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப, தமிழ்ச்செல்வன் அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தி ஆரம்பித்து வைப்பார். திரு. சொக்கன் தலைமை வகிக்க, யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த கலாநிதி நா. சுப்பிரமணியன் முதல் உரை நிகழ்த்துவார். தொடர்ந்து வாழ்வியலுடன் இணைந்த நாவல்கள் என்ற பொருளில் திரு. செம்பியன் செல்வனும், திரு. இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனும் வாழ்வியலுடன்இணைந்த அரங்கியல் எனும் பொருளில் திரு. குழந்தை சண்முகலிங்கமும் திரு. த. கலாமணியும் வாழ்வியலுடன் இணைந்த ஓவியங்கள் எனும்பொருளில் திரு. மு. இராதாகிருஷ்ணன் (கோபாலி) திரு தி. தயானந்தம் (தயா) ஆகியோரும் தமிழர் பாரம்பரியமும் பண்பாட்டு மாற்றங்களும் என்ற தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரனும் உரையாற்றுகின்றனர். -ரி

**மணிவாக்கு**

பெற்ற தாய் தந்தை கொடுமையே செய்தாதாலும், சகோதரிகள் வசைமாரி பொழிந்தாலும் அவர்களது சாப்பாட்டுக் கிண்ணத்தை நெய்ச்சோற்ருல்நிரப்ப வேண்டியது உனது சுயதர்மம்.

— கண்ணதாசன்

# நிரந்தர சமாதானம் ஏற்பட்டால் பெருமளவு அகதிகள் திரும்புவர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அரசுக்கிடையிலான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்படுமாயின் இந்தியாவில் இருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிக்கக்கூடுமென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பி. பி. சி தெரிவிக்கையில்: கடந்த மூன்று வருடங்களில் நாற்பத்தையாயிரம் அகதிகள் தாயகம் திரும்பியுள்ளனர். தமிழகத்தில் தங்கியிருக்கும்மொத்த அகதிகளில் அரைவாசிக்கும் குறைவானவர்களே தாயகம் திரும்பியுள்ளனர்.

இது தொடர்பாக பல சிரமங்கள் தொடர்ந்து நிலவிவந்தன. அகதிகளை திருப்பியனுப்பும் திட்டத்தில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அகதிகள் தமது விருப்பத்திற்கு மாருக தாயகம் திருப்பி அனுப்பப்படுவதாக பல குற்றச்சாட்டுகளும் எழுந்தன.

அகதிகள் திருப்பி அனுப்பப்படுவது அகதிகளின்சொந்த விருப்பத்திலேயே என அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

திரும்பி வந்த அகதிகளில் கணிசமானேர் தங்கள் சொந்தக் கிராமத்திற்குத் திரும்பிவிட்டதாகவும் மிகுதியானேர் அகதி முகாம்களில் தம் சுய விருப்பில் வாழ்வதாகவும் ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் மேலும் தெரிவித்துள்ளது.

-க-சி-ரி

## நமது நோக்கு

### இராணுவ அமைப்பு

''பாதுகாப்புப் படைகளிற் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே காணப்படுவதால், எல்லா இனத்தவரும் படையிற் சேர்த்துக் கொள்ளப்பட்டால், நாட்டில் பிரச்னைகள் உருவாகும் காலத்திற் கைகொடுத்து உதவும்!'' என முன்னுள் அமைச்சர் ஹமீது நாடாளுமன்றத்திற் கூறியிருக்கிருர்.

அவர் உரையிலிருந்து பல விஷயங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

முதலாவதாக — தற்போதுள்ள இராணுவம் அரச இராணுவம் அல்ல, சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவமே என்பதை உலகிற்கு மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

பூநகரிப் பாதையை அடைத்துக்கொண்டு நிற்கும் இராணுவம் எத்தகையது? ஏன் அப்படி நிற்கிறது? இதனை விளங்கிக் கொள்ள அவரது உரை உதவுமல்லவா?

இரண்டாவதாக—இதே இராணுவ அமைப்பு இன்று, நேற்று மாத்திரம தோன்றியதா?

பதினேழு ஆண்டு கால ஐ.தே.க. ஆட்சி மாத்திரமல்ல, அதற்கு முன்னைய ஆட்சிகளும் ஓரின இராணுவக் கட்டமைப்பை உருவாக்க உதவி வந்துள்ளன.

இதனுல் தான் — தமிழர்கள் தம்மைப் பாதுகாக்க வழிதேடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

மூன்ருவதாக — இராணுவ அமைப்பைப் பற்றி வெளிப்படையாகக் கருத்துக் கூறியவர் யார்? எந்த இனத்தைச் சேர்ந்தவர்?

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரே இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார். நீண்ட காலமாக நாடாளுமன்ற உறுப்பினராக மாத்திரமல்ல, அமைச்சராகவும் இருந்திருக்கிருர்.

தனது கட்சி ஆட்சியின் போது, இதனைச் சுட்டிக் காட்டி இராணுவ அமைப்பை மாற்றிட அவரால் முடியவில்லை;

முன்பு—பிரிட்டனிலும் கூட இத்தகைய ஓரின இராணுவ அமைப்பு இருந்து, இனப்பிரச்னைதோன்றியபோது ஏற்பட்ட சிக்கலை, வரலாற்று உண்மையை, அவர் நினைவுபடுத்தியிருக்கிருர்.

அவரதுஉரை யதார்த்த பூர்வமான சிந்தனை வளர்ச்சிக்கு நல்ல தீனியாக அமைந்துள்ளதல்லவா?

# பாதை திறப்பு அறிவிப்புக்கு முன் அரசு புலிகளுடன் ஆலோசனை நடத்தியிருக்க வேண்டும்!

(கொழும்பு)

ஆனையிறவு, பூநகரி-சங்குப்பிட்டி பாதை திறப்பது என்பது வடபகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் ஆனுல் இப்பாதைகள் திறப்பது என அரசு அறிவிப்பதற்கு முன், விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசித்திருந்தால் நன்ருயிருந்திருக்கும்.

இவ்வாறு திரு. வாசுதேவ நாணயக்காரா பூநகரி சங்குப்பிட்டி மற்றும் ஆனையிறவுப் பாதை திறப்பு பற்றி அரசின் அறிவிப்பு குறித்து கருத்து தெரிவிக்கையில் கூறினுர்.

எத்தகைய சாதகமான அல்லது பாதகமான அம்சங்கள் உள்ளபோதிலும் இந்த நடவடிக்கையின் மூலம் கிடைக்கும் நன்மைகளை குறைத்து மதிப்பிடக்கூடாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

'ராவய' பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் கருத்து வெளியிடுகையில்: இந்த பாதைகள் திறக்கப்படுவதனுல் வடபகுதி மக்களின் வாழ்க்கையை சகஜ நிலைக்கு கொண்டு வருவதற்கு உதவும எனக் கூறினுர்.

பத்திரிகையாளர் எஸ்.மனேரஞ்சன் அபிப்பிராயம் தெரிவிக்கையில்; இந்த விவகாரத்தில் அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளினதும் நிலைப்பாடு நியாயமானதே என்று குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் திருமதி சந்திரிகாவுக்கு எழுதிய கடிதம் கொழும்பு பத்திரிகைகளில் சென்ற புதன்கிழமை பிரசுரமாகியிருந்தது.

இதனையடுத்து அரசியல் தலைவர்கள், புத்தி ஜீவிகள் சாதகமான பாதகமானகருத்துக்களை வெளியிட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

-கே-ரி

## இராசி பலன்

03—03—1995

வெள்ளிக்கிழமை

**(தமிழுக்கு மாசி —19)**

துதியை மாலை 6-18வரை, உத்தரட்டாதி பி. இ, 1-44 வரை, சித்தாமிர்தயோகம், இராகுகாலம் காலை 10-57 முதல் 12-27 வரை, சுபவேளை காலை 6-27 முதல் 7-57 வரை.

மேஷம்: தொழில் ஏமாற்றம், வயிற்றுக் கோளாறு. அலைச்சல்.

இடபம்: மன்னிக்கும் பாங்கு, குடும்பசுகம், பயணம்.

மிதுனம். உறவினர் சகாயம், அதிக வாய்ப்பு, பாராட்டு.

கடகம்: ஆசையால் நாசம், பணமுடை, அமைதிக் குறைவு.

சிங்கம்: நண்பர் வேற்றுமை இடம்பெயர்வு, அகால உணவு.

கன்னி: இனசன வருகை, தொழில் லாபம், கலந்துரையாடல்.

துலாம்: வாக்கு வன்மை, வேலைப் பழு, தந்திர செயல்.

விருச்சிகம்: முயற்சி தாமதம், கடன்படல், வைத்திய. செலவு.

தனுசு: வேண்டாத தொல்லை, மனக்கவலை, அவப்பெயர்.

மகரம்: தெய்வ தரிசனம், விருந்துபசாரம், காரியசித்தி.

கும்பம்: குடும்ப பகை, மாமனுர் வன்மம், வெறுப்பு.

மீனம்: முடிவற்ற பிரச்னை, மனக்களிப்பு, விவேகம்.

— ஜோஸ்யர்

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-03-03

வெள்ளி இரவு

08-01 கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம். அறிமுகமாவது ''தாயகம்'' சஞ்சிகையின் தை - மாசி மாத இதழ். அதனையடுத்து சிறுகதை - ''அவளுக்கு விடிவு வேண்டும்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- ''சூரியன் சுடுகிறதா''
08-25 கணப்பொழுது - நாமகள் எழுதிய ''கப்டன் சந்தியா''
08-30 செய்திகள்
08-40 அரசியல் அரங்கம்
08-50 யுத்தக் கைதிகளின் உண்ணவிரதம் தொடர்பான பேட்டி

1995—03-04

சனி காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 நீங்கள் கேட்டவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி

நிகழ்ச்சி நிரல்

1995-03-03

வெள்ளி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 கனநேரக் காவியங்கள்
05-30 மண்ணின் குரல்
05-40 நேயர் கடிதங்கள்
05-45 வெற்றிச் சுவடுகள்
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 நாடகம்
06 15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## வெள்ளி விருந்து

# தமிழ் மறை ஓதும் முறை ஏது?

திருக்கோயில்களில் தமிழ் வேதம் ஓதும் போது பன்னிரு திருமுறைகளிலிருந்தே ஒதுதல் சிறப்பு. அதன் பின்னர் ஆலயத்திற்குரிய சுவாமிக்குப் பொருத்தமான புராணங்களை பெரியபுராணம் தவிர்ந்த மற்றைய புராணங்களில் தேர்ந்து எடுத்து ஓதுதல் தவறல்ல.

எல்லாவற்றையும் திருமுறைகளில் எடுத்து ஓதிவிட்டுப் புராணம் வருமிடத்தில் பெரிய புராணத்தைத் தவிர்ப்பது பொருந்துவது அல்ல.

இனி திருமுறைகளைத் தமிழ் வேதமாக ஓதும் போது எழுத்துப்பிழையற ஓதல் பிரதானம். பொருட்தெளிவு வெளிப்பட ஓதுதல் வேண்டும். இசையோடு ஓதுதல் வேண்டும். பக்தியோடு பாட வேண்டும். கேட்டிருப்பவர்களையும் பக்தியில் ஈர்த்து விடுதல் நன்று

ஒரு எழுத்தைத் தவறுதாலாகவேனும் உச்சரித்து விட்டால் அது சில சமயம் பொருளையே மாற்றிவிடும். அல்லது புதுக்கருத்தையே உணர்த்திவிடும்.

சிவபெருமான் சந்நிதானத்தில் ஒருமுறையே ஒரு வார்த்தையைச் சொல்லுவதால் விட்ட பிழையையும் திருத்திக் கொள்ளும் வாய்ப்பு இல்லை. பயபத்தியோடு உள்ளமுருகி உணர்ந்து பாடுவோமேயானுல் ஏற்படும் தவறுதல் நிகழாத வண்ணம் ஒருவாறு நம்மைத் திருத்திக் கொள்ளலாம்.

அருளாளர்கள் திருமுறைகளை எவ்வாறு ஓத வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டத் தவறியதில்லை. அவற்றில் ஒரு சிலவற்றை மனத்தில் பதித்துக் கொள்வது திருமுறை ஓதுவதற்குத் துணைநிற்கும்.

ஆளுடைய பிள்ளையார் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது,'' ''நெஞ்சகம் நைந்து நினைமின்'' ஆளுடைய அரசு: 'சொற்பாவும் பொருள் தெரிந்து தூய்மை நோக்கி'' மாணிக்கவாசக சுவாமிகள்: 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்...''

சிவ: சண்முகவடிவேல்

## பலதும் பத்தும்

### எந்த மருத்துவர்?

ஆங்கிலேய மன்னர் ஒருவருக்குத் தலைச்சுற்று. மிகச் சிறந்த மருத்துவர் அழைக்கப்பட்டார். ''எப்போது தோன்றியது? எப்படித் தோன்றியது?...'' இப்படிப் பல கேள்விகளை அடுக்கினுர் மருத்துவர்.

அரசனே வாய் திறக்கவில்லை...! காதில் ஏதாவது... என்று நினைத்துக் கொண்டு, ',காதில் இரைச்சலா?'' என்று கேட்டாராம்! ''ஏன் சத்தம்போடுகிறீர்கள்? நீங்களோ பெரிய நிபுணர். கேள்விகள் கேட்காது கண்டுபிடியுங்களேன்...!'' என்று பதில் கூறினுன் மன்னன் மிடுக்கோடு!

மருத்துவர் சளைக்கவில்லை. ''மன்னரே! மன்னியுங்கள். நான் பொருத்தமான மருத்துவர் அல்ல. மிருக வைத்தியர் ஒருவரை அழையுங்கள்!'' என்று கூறிவிட்டு வெளியேறினுராம்!

தம்மைப் பற்றிய தகவல்களை மறைக்காது வெளியிட வேண்டியது நோயாளிகள் கடமையல்லவா?

— மயூரன்

### தவக்கால நற்சிந்தனை

''தாழ்வுற்று நொறுங்கிய உள்ளத்தை இறைவா! நீர்புறக்கணிப்பதில்லை''

(சங். 50! 17 ஆ]

இறைவன் தாழ்மையை எவ்வளவுக்கு விரும்புகிருர் என்பதை எமக்குப் படிப்பிக்கத் தம் மகனையே தாழ்மையின் கோலமாக்கினுர். நாமும, நமது பாவங்களுக்காக வருநதி, தாழ்வுற்று, நொருங்கிய உள்ளத்தோடு அவரை அண்டினுல் அவரை வேண்டினுல் அவர் எம்மை என்றும் புறக்கணிக்க மாட்டார். அவரை கூவி அழைத்தால் எம் குரலுக்குச் செவி மடுப்பார்.

தா. மைதிலி

பரம்பரை தந்த பயன்தரு மரங்கள் மாண்புடன் வாழ்த்தி வளர்த்திடுவோம்

ஆசிய அபிவிருத்தி வங்கி

## வட-கிழக்குபுனர்வாழ்வுக்கு கூடுதல் நிதி வழங்கும்

[கொழும்பு.

வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனர் வாழ்வு மற்றும் விவசாயமுயற்கிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கும் நிதி உதவி அதிகரிக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜி எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ் உதவித் தொகை ஒரு கோடி 50 லட்சம் டொலர்களிலிருந்து ஐந்து கோடி டொலருக்கு அதிகரிக்கப்படும் என்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு இவ்வருடம் வழங்கவிருக்கும் கடன் உதவி கடந்த வருடத்தைவிட ஆறு கோடி டொலர்கள் அதிகமாகும் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## சமாதான முயற்சி பற்றி முதலீட்டாளர்க்கு விபரிப்பு

(லண்டன்)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாணும் முகமாக தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஹொங்கொங் முதலீட்டாளர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறினர்.

ஹொங்கெக்ங்கில் வர்த்தக பிரமுகர்களுடன் நடாத்திய சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஹொங்கொங் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கையில் முதலீடு செய்யமுன் வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். க-இ

## வட கிழக்கு பிரச்னைக்கு விரைவில் தீர்வு

– ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு—கிழக்கு பிரச்னை கூடிய விரைவில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுமென ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளுடன் நடாத்திய சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வு காண்பது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட முற்சிகள் பற்றி ஆசிய அபிவிருத்தி வங்கி பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. -க-இ

## மாநில சுயாட்சி மூலமே போருக்கு முடிவு கட்டலாம்

(வவுனியா)

''வடக்கு-கிழக்குப் பகுதியில் மாநில சுயாட்சியை ஏற்படுத்துவதன் மூலமே கொடிய யுத்தத்துக்கு முடிவு கட்ட முடியும்.

அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற இலக்கிய விழாவுக்கு தலைமை தாங்கிய பிரபல இலக்கியவாதியும் எழுத்தாளருமான திரு. பிரேம்ஜி ஞானசுந்தரம் கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

சமாதானம் என்பது அரசியல் தீர்வு ஒன்றினால்தான் காணமுடியும் என்ற கருத்தை பெரும்பான்மைமக்கள் இன்று உணர்ந்துள்ளமை யினலேயே ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு சிங்கள மக்கள் வாக்களித்துள்ளார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுக்கு முதலில் கரம் நீட்டியபோது அதை விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனும் ஏற்று சமாதானப் பேச்சு வார்த்தைக்கு இணங்கியுள்ளார். இதற்காக எழுத்தாளர்களின் சார்பில் திரு. பிரபாகரனுக்கு நன்றி கூறுகிறேன் என்று கூறினர். வி இ

### ஆரம்ப கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சி வலயத்திற்கான வலய விளையாட்டு அபிவிருத்திக்குழு அமைப்பதற்கான ஆரம்ப கூட்டம் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் தென்மராட்சிப் பகுதியிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

### 5000 தமிழ் மொழி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளித்து பேசியபோது அமைச்சர் பத்திரன மேலும் கூறியதாவது:

நாட்டிற்குப் பொருத்தமான தேசியக் கல்விக் கொள்கை உருவாக்கப்படும்.

இந்த முயற்சியில் தேசியக் கல்விக் குழுவின் சிபார்சுகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். இ

### க.பொ.த. [உ/த] பரீட்சை நகர இலக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உ[த) 1994 பரீட்சைக்கும் 1995 பரீட்சைக்கும் ஒதுக்கப்பட்ட பரீட்சை நகர இலக்கங்களில் மாற்றங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 1995 பரீட்சைக்கான நகர எண்கள் பரீட்சார்த்திகளின் நலன் கருதி இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சாவகச்சேரி | 47 |
| யாழ்ப்பாணம் | 48 |
| கிளிநொச்சி | 48ஏ |
| பளை | 48பி |
| நெடுந்தீவு | 48சீ |
| கோப்பாய் | 48டி |
| கரவெட்டி | 48ஈ |
| தெல்லிப்பளை | 49 |
| பருத்தித்துறை | 50 |

இ

### க. பொ. த. [உ த] மாணவர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (உ. த) மாணவருக்கு உதவுமுகமாக விலங்கியல் (பூச்சியியல்) செய்முறைப்பட்டறைகள் யாழ். பல்கலைக்கழக மாணவரின் உதவியுடன் பல்வேறு கோட்டங்களில் நடைபெறவுள்ளது. மேற்படி பட்டறை க. பொ. த. (உ. த) மாணவர்களுக்கு ஒரு சேவையாக நடாத்தப் படவுள்ளது.

இப்பட்டறையின் நான்காவது செயலமர்வு இராமநாதன் கல்லூரியில் எதிர்வரும் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணி முதல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

இயக்க பெயரை பயன்படுத்தி

## பணம் சேகரித்தவர் புலிகளால் கைது!



(யாழ்ப்பாணம்)

இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி போலிப் பற்றுச் சீட்டுக்களை உபயோகித்து பொதுமக்களிடமிருந்து புத்தக வெளியீட்டுக்கென பணம் வசூலித்த பழைய பொலிஸ் நிலைய வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதுடைய அப்புலிங்கம் பிரபாகரன் (தமிழ்ப்பிரியன் அல்லது பிரபா அல்லது ஜெயந்தன் அல்லது சுகிர்தன் அல்லது சர்மா) என்று அழைக்கப்படுபவர். கடந்த மாதம் 23ம்திகதி விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி மாளிகை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் அவரிடம் விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விலைமதிப்பற்ற இரத்தினக்கல் பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில ஒரு கண்காட்சிக்காக ஜனாதிபதி மாளிகைக்கு எடுத்துவரப் பட்டது.

தேசிய நூதனசாலையில் இந்த இரத்தினக்கல் சம்பந்த பதிவும் இருக்கிறது.

இதேவேளையில் இரத்தினக் கல் விடயம்பற்றி திரு.சஜித் பிரேமதாசா தெரிவிக்கையில்: இது ஒரு முழுப் பொய் எனவும் இப்படியான ஒரு கல்லைத் தான் ஜனாதிபதி மாளிகையில் பார்க்கவில்லை யென்றும் தெரிவித்துள்ளார். இ-வி

### திருமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரின் இந்நடவடிக்கையையடுத்து இப்பகுதிகளில் தொடர்ந்து வசிப்பதற்கு அங்குள்ள தமிழர் அச்சம் தெரிவித்து வருகின்றனராம். -க-இ

### சமாதானம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்ற நிலைப்பாட்டையே இந்தியா கொண்டுள்ளது.

ஆகவே, இந்தப் பேச்சு வார்த்தைகளின் முயற்சிகளை இந்தியா மிகவும் நெருக்கமாகவும், அனுதாபத்துடனும் அவதானிக்கின்றது என்று கூறினர். -வி-இ

## இராணுவம் சிரமங்களை எதிர் நோக்குகிறது

[கொழும்பு[

இலங்கை இராணுவத்தினர் யுத்த முனையில் தாக்குப்பிடிக்கக்கூடிய மனப் பக்குவத்தைக் கொண்டிருப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

படையினர் மத்தியில் நிலவும் விரக்தி மனப்பான்மை, சுற்றம் சூழலுடன் தொடர்புகள் இன்மை, விடுமுறை கிடைக்காமை போன்ற காரணங்களால் அவர்கள் உள ரீதியில் பாதிப்படைந்துள்ளனர்.

தமது சொந்தப் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு தமது கையில்உள்ள ஆயுதங்களையே பாவித்து தமது சகபாடிகள், உறவினர், நண்பர்கள் போன்றோரையே கொலை செய்யுமளவுக்கு படையினர் மனநிலை பேதலித்துவிட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளையில் இலங்கையில் படையினரின் பெருக்கமும், ஆயுதப்பயன்பாடும் எதிர்கால சமுதாயத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையலாமென சமூகவியலாளர் கருத்து வெளியிட்டிரும்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. க-இ

வெளிநாடுகளிலிருந்து

## நாடுகடத்தப்படும் தமிழரிடம் பணம் பறிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கைக்கு வரும் தமிழர்களிடம் பணம் பறிக்கும் அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பு கட்டுநாய விமான நிலையத்தில் இரகசியமாக இயங்கி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு முகவர்கள் தப்பான வழியில் பெற்றுக்கொடுத்த விஸாக்களை நம்பி வெளிநாடு செல்லும் தமிழர் பலர் மீண்டும் விமானங்கள் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறங்கும்போது இவர்களிடம் அங்கு கடமையாற்றும் குறிப்பிட்ட அதிகாரிகள் குழுவே பணம் பறிப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளார்கள். இது பற்றி பொலிசார் விசாரணை செய்துவருவதாக கூறப்படுகிறது.

தப்பான விஸாவினுல் நாடு கடத்தப்படுபவர் கட்டுநாயக்க விமான நிலையம் வந்திறங்கியதும், குடிவரவு-குடியகல்வு பகுதியில் வேலைசெய்யும் சில அதிகாரிகள் அவர்களிடம் பெருமளவு பணம் தரும்படியும் இல்லாவிட்டால் பொலிசாரிடம் ஒப்படைக்கப்போவதாகவும் மிரட்டிபணம் பறிப்பதாகவும் அந்த நேரத்தில் பணம் இலாவிட்டால் கடவுச் சீட்டிலுள்ள விலாசத்துக்கு வருவதாகவும் கூறி வீடுகளுக்குச்சென்று பணம் பறிப்பதாகவும் பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. வி-இ

### 5 கோடி பவுண்ஸ் அன்பளிப்பு

(லண்டன்)

இலங்கையின் வடபகுதி அபிவிருத்தி வேலைகளுக்கு ஐந்து கோடி ஸ்ரேலின் பவுண்களை அன்பளிப்புச்செய்ய பிரிட்டிஷ் அரசு முன்வந்துள்ளது.

இந்த அன்பளிப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவும் யூ. என். எச். சி ஆர் ஊடாகவும் வழங்கப்படுமென்று பிரிட்டிஷ் அரசு அறிவித்விள்ளது. வி-இ

### திருக்கேதீஸ்வரத்தில்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வம் வெளியேறியதும் இப்பகுதிகளில் மக்களை மீண்டும் குடியமர்த்துவதற்கான அனைத்து வேலைகளும் மேற்கொள்ளப்படுமென்றும் அமைச்சர் கூறினர். -வி-இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-